CNR NO: TNTH13-009192-2023

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், போடிநாயக்கனூர்.

**முன்னிலை : திரு.M.நல்லகண்ணன், B.Com., B.L.,**
நீதித்துறை நடுவர், போடிநாயக்கனூர்.

2026-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 19-ஆம் நாள் வெள்ளிக்கிழமை

சுருக்குமுறை விசாரணை வழக்கு எண்: 1088/2023

ராஜா ..... புகார்தாரர்

/ எதிர் /

சுகப்பிரியா ..... எதிரி

<u>வழக்கின் சுருக்கம்</u>

<table>
<tr><td>வ. எண்</td><td colspan="2">விவரம்</td></tr>
<tr><td rowspan="2">1.</td><td colspan="2">இருதரப்பினர்களின் பெயர்கள்</td></tr>
<tr><td><u>புகார்தாரர்</u>:<br><br>ராஜா (50/2026),<br>த/பெ.மூக்கையா,<br>கதவு எண்.18,<br>செல்லாயி அம்மன் கோவில் தெரு,<br>போடிநாயக்கனூர் டவுன்,<br>தேனி மாவட்டம்.</td><td><u>எதிரி</u>:<br><br>சுகப்பிரியா (47/2026),<br>க/பெ.வெங்கடேசன்,<br>கதவு எண்.20, வார்டு எண்.20,<br>கிழக்குத் தெரு, ஜீவா நகர்,<br>போடிநாயக்கனூர் டவுன்,<br>தேனி மாவட்டம்.</td></tr>
<tr><td>2.</td><td>எதிரியின் வயது</td><td>47/2026.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 3. | தந்தை/கணவர் பெயர் | க/பெ.வெங்கடேசன். |
| 4. | மதம் | –. |
| 5. | தொழில் | –. |
| 6. | முகவரி | கதவு எண்.20, வார்டு எண்.20, கிழக்குத் தெரு, ஜீவா நகர், போடிநாயக்கனூர். |
| 7. | தாலுகா, மாவட்டம் | போடிநாயக்கனூர், தேனி. |
| 8. | சம்பவம் நிகழ்ந்த நாள் | பொருந்தாது. |
| 9. | கைது | –– |
| 10. | பிணையில் விடுவித்தல் | –– |
| 11. | எதிரி சிறையில் இருந்த நாட்கள் | –– |
| 12. | புகார் தாக்கல் செய்யப்பட்ட நாள் | 03.10.2023. |
| 13. | கோப்பிற்கு எடுக்கப்பட்ட தேதி | 05.10.2023. |
| 14. | அழைப்பாணையுடன் நகல் வழங்கப்பட்ட தேதி | 15.11.2023. |
| 15. | கு.வி.மு.ச பிரிவு 251-ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 03.04.2024. |
| 16. | விசாரணை துவக்கம் | 03.05.2024. |
| 17. | சாட்சிகள் விசாரிக்கப்பட்ட நாள் | Witness / Chief / Cross:<br>PW1 / 18.12.2024 / 17.04.2025<br>DW1 / 13.03.2026 / 13.03.2026<br>DW2 / 08.05.2026 / Nil |
| 18. | விசாரணை முடிவு | 22.05.2026. |
| 19. | கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)-ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 27.06.2025. |

<table>
<tr><td rowspan="2">20.</td><td rowspan="2">பிற மனுக்கள் மற்றும் அதன் முடிவுகள்</td><td>Date</td><td>U/s</td><td>Cr.M.P. No.</td><td>Result</td></tr>
<tr><td>30.01.2026</td><td>315 of Cr.P.C</td><td>2153/2025</td><td>Allowed</td></tr>
<tr><td>21.</td><td>தீர்ப்பு விவரம்</td><td colspan="4">விடுதலை.</td></tr>
<tr><td>22.</td><td>தீர்ப்புரை நகலை வழங்குதல்</td><td colspan="4">இல்லை.</td></tr>
<tr><td>23.</td><td>தலைமறைவாக இருந்த எதிரியின் விவரங்கள்</td><td colspan="4">இல்லை.</td></tr>
<tr><td>24.</td><td>மேல் நீதிமன்றத்தின் தடை மற்றும் அதன் முடிவு</td><td colspan="4">இல்லை.</td></tr>
<tr><td>25.</td><td>பாதிக்கப்பட்ட நபருக்கு இழப்பீட்டிற்கான உத்தரவு</td><td colspan="4">இல்லை.</td></tr>
<tr><td>26.</td><td>காலதாமதத்திற்கான காரணம்</td><td colspan="4">புகார்தாரர் தரப்பு சாட்சியை எதிரி தரப்பில் காலதாமதமாக குறுக்கு விசாரணை செய்ததும் மற்றும் எதிரி தரப்பு சாட்சிகளை காலதாமதமாக முன்னிறுத்தியதும்.</td></tr>
</table>

*****

இவ்வழக்கு 05.10.2023 அன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதியாக 05.06.2026 அன்று விசாரணைக்கு வந்தபோது, புகார்தாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.A.சந்திரசேகரன் அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்குரைஞர் திரு.K.ஜீவாநந்தன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டு, வழக்காவணங்களைப் பரிசீலனை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.....

## <u>தீர்ப்புரை</u>

1). இவ்வழக்கானது புகார்தாரர் சார்பில் மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138 மற்றும் 142 மற்றும் குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 200–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு, கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

2). **<u>மனுவின் சுருக்கம்</u>**:

2.1). புகார்தாரரிடம், எதிரி கடந்த 16.07.2023 அன்று ரூ.12,00,000/-த்தை ரொக்கமாக கைமாற்றுக் கடனாகப் பெற்றுக்கொண்டதாகவும், மேற்படி கடனிற்கு ஆதரவாக 17.08.2023 பின்தேதியிட்டு போடிநாயக்கனூர் கிளையின், SOUTH INDIAN BANK LTD வங்கியின் 033258 என்ற எண் கொண்ட காசோலை ஒன்றை ரூ.12,00,000/-த்திற்கு எதிரி முழுவதுமாக பூர்த்தி செய்து கையொப்பமிட்டு புகார்தாரரிடம் கொடுத்ததாகவும், பின்னர் எதிரி உறுதியளித்ததன்பேரில், மேற்படி காசோலையைப் பணமாக்கும் பொருட்டு புகார்தாரர் கணக்கு வைத்திருக்கும் IDBI BANK LTD, போடிநாயக்கனூர் கிளையில் 17.08.2023 அன்று வசூலுக்குச் செலுத்தியபோது, எதிரியின் வங்கி கணக்கில் “Insufficient Funds” என்ற காரணத்தினால் காசோலையானது 18.08.2023 அன்று திருப்பப்பட்டுவிட்டதாகவும், மேற்படி காசோலைக்குரிய தொகையைக் கேட்டு 21.08.2023 அன்று புகார்தாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை நீர் பெற்றுக்கொண்டு, பல பொய்யான காரணங்களைக் கூறி கடந்த 05.09.2023 அன்று பதில் அறிவிப்பு அனுப்பியதாகவும், மேலும், இதுவரை எதிரி காசோலைக்குரிய தொகையைத் திருப்பிச் செலுத்தாமலும், புகார்தாரரை ஏமாற்றி மோசடி செய்துள்ளதாகவும்,

2.2). எனவே, எதிரியின் செய்கையானது மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றமாகும் என்றும், எனவே, புகார்தாரருக்கு ஏற்பட்ட இழப்புக்கு எதிரிக்கு தண்டனை வழங்கி, உரிய இழப்பீட்டை எதிரியிடமிருந்து பெற்றுத்தர வேண்டி புகார்தாரர் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

3). எதிரிக்கு அழைப்பாணையுடன் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டு, அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு, எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானபோது, எதிரி மீது மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழான குற்றத்தின் சாரம்சம் குறித்து 03.04.2024-ஆம் தேதி விளக்கி கூறி வினவியபோது, எதிரி பொய் வழக்கு என்று கூறியுள்ளார். எனவே, புகார்தாரர் தரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4). <u>**புகார்தாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**</u>:–

புகார்தாரர் தரப்பு சாட்சிகளை விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, புகார்தாரர் ராஜா என்பவர் ம.சா.1 சாட்சியாக விசாரிக்கப்பட்டு, ம.சா.1–ன் மூலமாக ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.7 வரையான சான்றாவணங்கள் குறியிடப்பட்டுள்ளன.

5). புகார்தாரர் தரப்பு சாட்சியத்தில் எதிரிக்குப் பாதகமாக உள்ள அம்சங்களைத் தொகுத்து 27.06.2025-ஆம் தேதி கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)-ன் கீழ் வினவியபோது, புகார்தாரர் தரப்பு சாட்சியத்தை பொய் சாட்சி என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சி உண்டு என்றும் கூறினார். எனவே, எதிரி தரப்பு சாட்சிய விசாரணைக்கு வாய்ப்பு வழங்கப்பட்டு, எதிரி தரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

6). **<u>எதிரி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**:–

எதிரி தரப்பில், புகார்தாரரின் மனைவியான வசந்தி என்பவர் எ.சா.1 சாட்சியாக விசாரிக்கப்பட்டு, எ.சா.1–ன் மூலமாக சான்றாவணங்கள் எதுவும் குறியிடப்படவில்லை. மேலும், எதிரி தரப்பில், IDBI வங்கியின் துணை மேலாளர் ஸ்ரீவட்சவா என்பவர் எ.சா.2 சாட்சியாக விசாரிக்கப்பட்டு, எ.சா.2–ன் மூலமாக சான்றாவணங்கள் எதுவும் குறியிடப்படவில்லை.

7). இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

<u>8). **தீர்வுக்குரிய பிரச்சனை**</u>:

8.1). இவ்வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138-ன் கீழான குற்றச்சாட்டானது புகார்தாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா?

8.2). மனுவில் கோரியுள்ள இழப்பீட்டுத் தொகை புகார்தாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதே தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

9). **<u>தீர்வும் அதன் காரணமும்</u>**

9.1). வழக்கு காசோலை எதிரியின் வங்கிக் கணக்கிற்குரிய காசோலைதான் என்பது எதிரி தரப்பில் மறுக்கப்படவில்லை. மேலும், ம.சா.ஆ.1 வழக்கு காசோலையானது 17.08.2023-ஆம் தேதியிடப்பட்டுள்ள நிலையில், மேற்படி

காசோலையை புகார்தாரர் தான் கணக்கு வைத்துள்ள போடிநாயக்கனூர் கிளை, IDBI BANK LTD–ல் வசூலுக்குச் செலுத்தியுள்ளார் என்பதும், மேற்படி காசேலையானது 18.08.2023-ஆம் தேதி Insufficient Funds என்ற குறிப்புடன் திரும்பியுள்ளது என்பதை ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.3 வரையான ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது.

9.2). காசோலை திருப்பப்பட்டவுடன் எதிரிக்கு வழக்கறிஞரின் அறிவிப்பு சட்ட முறையான காலத்தில் சார்பு செய்யப்பட்டுள்ளதா? என்பது குறித்துப் பரிசீலனை செய்கையில், ம.சா.ஆ.4 வழக்கறிஞர் அறிவிப்பானது 21.08.2023-ஆம் தேதி புகார்தாரரால் அனுப்பப்பட்டுள்ளது என்பதும், அதனை எதிரி 22.08.2023-ஆம் தேதி பெற்றுக் கொண்டுள்ளார் என்பதையும் ம.சா.ஆ.4 முதல் ம.சா.ஆ.6 வரையான ஆவணங்கள் வாயிலாக அறிய முடிகிறது. எனவே, புகார்தாரர் சட்டமுறையான காலத்தில் சட்ட அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்பதும், அதனை எதிரி பெற்றுக்கொண்டுள்ளார் என்பதும், அதற்கு எதிரி 05.09.2023-ஆம் தேதி பதிலறிவிப்பு அனுப்பியுள்ளார் என்பதும் மேற்படி சான்றாவணங்களின் வாயிலாகப் புகார்தாரர் தரப்பு நிரூபித்துள்ளது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

9.3). மேலும், வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், வழக்கானது 03.10.2023-ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தால் 05.10.2023-ஆம் தேதி முறையாக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. எனவே, வழக்கானது உரிய காலத்திற்குள் புகார்தாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக இந்த நீதிமன்றம் கருதுகிறது. வழக்கு காசோலையானது எதிரி, புகார்தாரருக்கு கொடுக்க வேண்டிய சட்டப்படியான கடனிலிருந்து விடுபடக் கொடுக்கப்பட்டதா? என்பது குறித்து பரிசீலனை செய்கையில், எதிரி காசோலையையும், அதிலுள்ள கையொப்பத்தையும் மறுக்கவில்லை. மேலும், எதிரியை கு.வி.மு.ச பிரிவு 251-ன் கீழ் வினவியபோது, பொய் வழக்கு என்று மட்டுமே கூறியுள்ளார்கள். மேலும், எதிரியை கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)-ன் கீழ் வினவியபோது, எதிரி பொய் சாட்சி என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சி உண்டு என்றும்

குறிப்பிட்டுள்ளாரே தவிர, வழக்கு காசோலையில் உள்ள கையொப்பம் தன்னுடையதல்ல என எதிரி மறுக்கவில்லை. எனவே, மாற்றுமுறை ஆவணச் சட்டப்பிரிவு 118 மற்றும் 139-ன் கீழான சட்டப்படியான அனுமானம் புகார்தாரருக்கு ஆதரவாக எழுகிறது என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9.4). மேற்படி சட்டப்பூர்வமான அனுமானத்தை மறுத்துரைக்கும் வகையில், எதிரி தனது தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய நேரடியாக சாட்சிகளை முன்னிலைப்படுத்த வேண்டியதில்லை. மாறாக வழக்கை இதர சாட்சிய, சான்றாவணங்கள் வாயிலாகவோ, அல்லது சூழ்நிலை, சந்தர்ப்பத்தின் வாயிலாகவோ மறுத்துரைக்கலாம் என்று மாண்பமை உச்ச நீதிமன்றம் பல்வேறு முன் வழக்குகளில் வழிவகை செய்துள்ளது. எதிரி தரப்பில் புகார்தாரருக்கு ஆதரவான அனுமானம் மறுக்கப்பட்டுள்ளதா? என்பது குறித்துப் பரிசீலனை செய்கையில்,

9.5). புகார்தாருக்கு எதிரியை எவ்வாறு தெரியும் என்பது குறித்து பரிசீலனை செய்கையில், புகார்தாரர் ராஜா என்பவரது குறுக்கு விசாரணையில், "**எதிரி சுகப்பிரியாவை எத்தனை வருடமாக தெரியும் என்றால், 20 வருடமாக தெரியும். 20 வருடமாக எப்படி பழக்கம் என்றால், அனுமந்தம்பட்டியில் வைத்து அவரது கணவர் மூலம் பழக்கம். எதிரியின் வீட்டிற்கு சென்றுள்ளேனா? என்றால், 10 முறை இருக்கும். எதிரியின் வீட்டில் யாரைப் பார்த்துள்ளேன் என்றால், சுகப்பிரியாவின் கணவரின் அப்பாவை பார்த்துள்ளேன், அவரது அப்பாவின் பெயர் தெரியாது. எதிரிக்கு எத்தனை குழந்தைகள் உள்ளார்கள் என்ற விபரம் தெரியுமா? என்றால், தெரியாது. என்னிடம் காட்டப்படும் போட்டோவில் எதிரியின் கணவரை தெரியுமா? என்றால், ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் போட்டோவில் எதிரி உள்ளாரா? என்றால், சிறு வயது போட்டோ என்பதால் தெரியவில்லை. அது தற்போதைய போட்டோ என்றால், சரியில்லை. எதிரியின் கணவரை நான் பார்த்ததே இல்லை என்றும், அதனால்தான் போட்டோவில் என்னால் அடையாளம் காட்ட முடியவில்லை என்றால், சரியல்ல**" என சாட்சியம்

அளித்துள்ளார்.

9.6). எதிரியை எதிரியின் கணவர் வாயிலாக பழக்கம் என குறிப்பிட்டுள்ள புகார்தாரர், அவரது வீட்டிற்கு 10 முறை சென்று வந்ததாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும், இந்த எதிரியின் கணவர் அடங்கிய புகைப்படத்தை நீதிமன்றத்தில் காண்பித்து எதிரியின் கணவர் உள்ளாரா? என்று கேட்டபோது, எதிரியின் கணவரை புகார்தாரரால் நீதிமன்றத்தில் அடையாளம் காண்பிக்க முடியவில்லை எனவும், எனவே, புகார்தாரருக்கு எதிரியை யார் என்றே தெரியாது என்பதால்தான் எதிரியின் கணவரை புகார்தாரரால் அடையாளம் காண்பிக்க முடியவில்லை எனக் குறிப்பிடும் எதிரி தரப்பு வாதம் குறித்து பரிசீலனை செய்கையில், மேற்படி, எதிரியின் கணவர் அடங்கிய புகைப்படத்தை இந்த நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்யாமல், அது குறித்து எதிரி தரப்பில் எழுப்பப்பட்டுள்ள கேள்வி ஏற்புடையது அல்ல என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9.7). மேலும், எதிரியின் கணவர் அடங்கிய புகைப்படத்தைதான் புகார்தாரரிடம் காண்பித்து எதிரி தரப்பில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது என்ற விபரம் நிரூபிக்கப்படாமல், அந்த புகைப்படத்தில் உள்ள எதிரியின் கணவரை புகார்தாரரால் அடையாளம் காண்பிக்க முடியவில்லை எனக் குறிப்பிடும் எதிரி தரப்பு வாதம் ஏற்புடையது அல்ல என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது. ஒரு ஆவணத்தை நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்யாமல், அது குறித்து எழுப்பப்படும் கேள்வி ஏற்புடையது அல்ல என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9.8). மேலும், எதிரி தரப்பில் ம.சா.1 ராஜா என்பவரது குறுக்கு விசாரணையில், **"எதிரி ஆவின் பால் டீலர்ஷிப் எதுவும் எடுத்து நடத்தவில்லை என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல. எதிரி சுகப்பிரியா நிறுவனம் என்று எதுவும் நடத்தவில்லை என்றும், உண்மையில் நடத்தி இருந்தால் அதற்கான**

**ஆதாரம் தாக்கல் செய்திருப்பேன் என்றும், அவ்வாறு நடத்தாததால்தான் தாக்கல் செய்ய இயலவில்லை**" என சாட்சியமளித்துள்ளார். எனவே, எதிரி சுகப்பிரியா நிறுவனம் எதுவும் நடத்தவில்லை என்றும், உண்மையில் நடத்தி இருந்தால் அதற்கான ஆதாரம் தாக்கல் செய்திருக்க வேண்டும், அவ்வாறு நடத்தாததால்தான் புகார்தாரரால் தாக்கல் செய்ய இயலவில்லை எனக் குறிப்பிடும் எதிரி தரப்பு வாதம் ஏற்புடையது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

9.9). ஏனெனில், "**எதிரி தேனி மாவட்டம் முழுவதும் ஆவின் பால், நெய், தயிர், வெண்ணை போன்றவற்றையும், செயற்கை பட்டன் காளானையும் கொள்முதல் செய்து வியாபாரம் செய்து வருவதாகவும், சுகப்பிரியா டீலர் என்ற பெயரில் நிறுவனத்தை நடத்தி வருவதாகவும், எதிரியும், எதிரியின் கணவரும் கேரளாவில் இருந்து ஏலக்காய்களை கிரையம் பெற்று வட மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யும் தொழில் செய்து வருவதாகவும்**" புகார்தாரர் தனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள நிலையில், எதிரி தரப்பில் அது முற்றிலும் மறுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு எதிரி தொழில் செய்து வந்திருந்தால், அதனை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு புகார்தாரருக்கு உள்ளது என்று எதிரி தரப்பில் கொடுக்கப்பட்டுள்ள பதில் அறிவிப்பான ம.சா.ஆ.7 முதற்கொண்டு குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், புகார்தாரர் தரப்பில் அந்த விபரம் நிரூபிக்கப்படவில்லை என குறிப்பிடும் எதிரி தரப்பு வாதம் ஏற்புடையது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

9.10). மேலும், எதிரிக்கு கடன் கொடுக்கும் அளவிற்கு புகார்தாரருக்கு வசதி இல்லை என்பதாக குறிப்பிடும் எதிரி தரப்பு வாதம் குறித்து பரிசீலனை செய்கையில், புகார்தாரர் தனது நிரூபண வாக்குமூலத்தில், "**தான் மாங்காய் விற்பனை செய்தது மற்றும் தனது மனைவியின் நகைகளை அடகு வைத்து 12 லட்சம் ரூபாய் எதிரிக்கு கடன் கொடுத்ததாக**" குறிப்பிட்டுள்ளார். இது குறித்து புகார்தாரர் ராஜா என்பவரது குறுக்கு விசாரணையில், "**எனது மனைவியின் நகையை எங்கு அடகு வைத்தேன் என்றால், ஐடிபிஐ வங்கி, போடிநாயக்கனூர் கிளையில் அடகு வைத்தேன். எந்த தேதியில் அடகு**

**வைத்தேன் என்றால், 7-வது மாதம், 2023-ஆம் வருடம் அடகு வைத்தேன். ஆனால், தேதி ஞாபகம் இல்லை. என்னென்ன நகைகளை அடகு வைத்தேன் என்றால், மாங்காய் மாலை. எந்த தேதியில் எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்றால், 16.07.2023-ஆம் தேதி. எங்கு வைத்து கொடுத்தேன் என்றால், எனது வீட்டில் வைத்துக் கொடுத்தேன்**" என சாட்சியம் அளித்துள்ளார்.

9.11). அதாவது, எதிரிக்கு கொடுத்ததாகச் சொல்லும் பணம் தனக்கு மாங்காய் வியாபாரம் மூலமாக கிடைத்ததாகவும், தனது மனைவியின் நகைகளை ஜூலை மாதத்தில், 2023-ஆம் வருடத்தில், தனது ஐடிபிஐ வங்கியில் அடகு வைத்ததாக ம.சா.1 ராஜா தனது குறுக்கு விசாரணையில் குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், அவ்வாறு புகார்தாரர் ராஜா நகைகளை அடகு வைத்தார் என்பதற்கு ஆதரவாக எவ்வித சாட்சிகளையும் விசாரிக்க அவர் முன்வராத நிலையில், எதிரி தரப்பில் ஐடிபிஐ வங்கியின் துணை மேலாளர் எ.சா.2-வது சாட்சியாக விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

9.12). எ.சா.2 IDBI வங்கியின் துணை மேலாளர் ஸ்ரீவட்சவா என்பவர் தனது முதல் விசாரணையில், "**ராஜா எங்களது வங்கியில் 2023-ஆம் வருடம், ஜூலை மாதம் நகை எதுவும் அடகு வைக்கவில்லை, ஜனவரி மாதம் மற்றும் செப்டம்பர் மாதத்தில் நகைகளை அடகு வைத்துள்ளார். ஜனவரி மாதம் ரூ.1,90,000/-ம் மற்றும் செப்டம்பர் மாதம் ரூ.1,75,000/-ம் கடன் பெற்றுள்ளார்**" என சாட்சியம் அளித்துள்ளார்.

9.13). எனவே, புகார்தாரர் ராஜா ஜூலை மாதத்தில் தனது மனைவியின் நகைகளை ஐடிபிஐ போடிநாயக்கனூர் வங்கி கிளையில் அடகு வைத்ததாகச் சொல்லும் விபரம் உண்மை அல்ல என்பதை எ.சா.2 ஸ்ரீவட்சவா என்பவரின் சாட்சியத்தின் வாயிலாக அறிய முடிகிறது. மேலும், புகார்தாரர் ராஜா ஜனவரி மாதம் மட்டுமே நகையை அடகு வைத்துள்ளார் என்பதும், அதுவும் ரூ.1,90,000/-ம் ரூபாய்க்கு மட்டுமே அடகு வைத்துள்ளார் என்பதையும் அறிய முடிகிறது. மேலும், எதிரிக்கு 16.07.2023-ஆம் தேதி

கடன் கொடுத்ததாகச் சொல்லும் புகார்தாரர், அதற்கு பின்னிட்டு தனது தேவைகளுக்காக செப்டம்பர் மாதத்தில் நகைகளை அடகு வைத்துள்ளார் என்பதையும் அறிய முடிகிறது. எனவே, தனக்கே பணத்தேவை உள்ள போதும், எதிரிக்கு தனது நகைகளை அடகு வைத்ததாகச் சொல்லும் புகார்தாரர் தரப்பு வாதம் ஏற்புடையது அல்ல எனக் குறிப்பிடும் எதிரி தரப்பு வாதம் ஏற்புடையது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

9.14). ஏனெனில், புகார்தாரர் ம.சா.1 ராஜா என்பவர் தனது குறுக்கு விசாரணையில், "**எதிரிக்கு வட்டிக்கு கடன் கொடுத்தேனா? என்றால், இல்லை**" என சாட்சியம் அளித்துள்ளார். எனவே, புகார்தாரருக்கு பணத்தேவை உள்ள நிலையில், எதிரிக்கு நகையை அடமானம் வைத்து கடன் கொடுக்க வேண்டிய தேவை என்ன என்பது குறித்தும், வட்டிக்கு பணம் கொடுக்காமல், அவ்வளவு பெரிய தொகையை ரூ.12,00,000/-த்தை கைமாற்று கடனாக கொடுக்க வேண்டிய அவசியம் என்ன வந்தது என்பது குறித்தும் புகார்தாரர் தரப்பில் எந்தவித விளக்கமும் இல்லை எனக் குறிப்பிடும் எதிரி தரப்பு வாதம் ஏற்புடையது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

9.15). மேலும், எதிரி தரப்பில் புகார்தாரரின் மனைவி வசந்தி என்பவர் எ.சா.1-வது சாட்சியாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். அவர் தனது முதல் விசாரணையில், "**சுகப்பிரியாவின் கணவர் யார் என்பது குறித்து போட்டோவை காண்பித்தால் என்னால் குறிப்பிட்டுச் சொல்ல முடியுமா? என்றால், ஞாபகம் இல்லை. நான் எதிரியின் கணவரை இதுவரை பார்த்ததில்லை**" என சாட்சியம் அளித்துள்ளார்.

9.16). அதாவது, புகார்தாரர் ராஜாவின் மனைவியாகிய வசந்தி தனது முதல் விசாரணையில், தான் எதிரியின் கணவரை பார்த்ததே இல்லை என சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், இது குறித்து புகார்தாரர் ராஜா தனது குறுக்கு விசாரணையில், "**எங்கு வைத்து பணம் கொடுத்தேன் என்றால், எனது வீட்டில் வைத்து கொடுத்தேன். பணம் கொடுக்கும் போது யார் யார் வந்தார்கள் என்றால், எதிரியும், அவரது மனைவியும்**

**வந்தார்கள். என்னுடன் யார் யார் இருந்தார்கள் என்றால், எனது மனைவியும், நானும் இருந்தோம்**" என சாட்சியம் அளித்துள்ளார்.

9.17). எனவே, புகார்தாரர் ராஜா தனது வீட்டில் வைத்து பணம் கொடுத்தபோது, எதிரியும், எதிரியின் கணவரும் தங்களது வீட்டிற்கு வந்ததாகவும், தனது மனைவியின் முன்னிலையில்தான் தான் பணத்தை கொடுத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ள நிலையில், எ.சா.1 வசந்தி என்பவரது எதிரி தரப்பு முதல் விசாரணையில், தனக்கு எதிரியின் கணவரை தெரியாது என்றும், அவரைத்தான் பார்த்ததில்லை எனவும் ம.சா.1 ராஜா என்பவரின் குறுக்கு விசாரணைக்கு விரோதமாக சாட்சியம் அளித்துள்ளார் என குறிப்பிடும் எதிரி தரப்பு வாதம் ஏற்புடையது என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9.18). மேலும், எ.சா.1 வசந்தி தனது முதல் விசாரணையில், தனக்கு எதிரியின் கணவரை தெரியாது என குறிப்பிட்டு சாட்சியம் அளித்து விட்ட பிறகு, அதனை சரி செய்யும் விதமாக புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது, "**சுகப்பிரியாவும், அவரது கணவரும் வந்து என் கணவரிடம் பணம் வாங்கினார்கள். எவ்வளவு பணம் வாங்கினார்கள் என்ற விபரம் தெரியுமா? என்றால், அவர்கள் 15 லட்சம் கேட்டார்கள், அவ்வளவு இல்லை என்று சொல்லி 12 லட்சம் கொடுத்தார். அந்த பணத்தை சுகப்பிரியாவும், அவரது கணவரும் எண்ணி சரி பார்த்துதான் வாங்கி சென்றார்கள். எதிரியும், அவரது கணவரும் எங்களது வீட்டில் வந்து எவ்வளவு நேரம் இருந்திருப்பார்கள் என்றால், சுமார் 1 முதல் 1 ¼ மணி நேரம் இருந்திருப்பார்கள். அந்த ஒரு மணி நேரமும் நான் அவர்களுடன்தான் இருந்தேனா? என்றால், ஆமாம்**" என சாட்சியம் அளித்துள்ளார்.

9.19). அதாவது, எ.சா.1 வசந்தி தனது முதல் விசாரணையில், எதிரியின் கணவரை தான் பார்த்ததே இல்லை என சாட்சியம் அளித்துள்ள நிலையில், அதனை சரி செய்யும் விதமாகவே, புகார்தாரர் தரப்பில் இவ்வாறு குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது

எனக் குறிப்பிடும் எதிரி தரப்பு வாதம் ஏற்புடையது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

9.20). எனவே, புகார்தாரருக்கு எதிரிக்கு கடன் கொடுக்கும் அளவிற்கு வசதியில்லை எனக் குறிப்பிடும் எதிரி தரப்பு வாதத்தை பொய்ப்பிக்கும் வகையில் எந்தவித சாட்சியும் புகார்தாரர் தரப்பில் முன்னிடப்படவில்லை என்றும், மேலும், புகார்தாரருக்கு கடன் கொடுக்கும் அளவிற்கு வசதி இல்லை என்பதை எ.சா.2-ன் சாட்சியத்தின் வாயிலாகவும் தெரிய வருகிறது என்றும், மேலும், எதிரியின் கணவரை புகார்தாரருக்கும், அவரது மனைவிக்கும் தெரியாது என்றும் இந்த நீதிமன்றம் கருதுகிறது.

9.21). ஏனெனில், புகார்தாரர் ராஜா தனது முதல் விசாரணையில், தனக்கும், தனது மனைவிக்கும், எதிரியையும், எதிரியின் கணவரையும் தெரியும் என குறிப்பிட்டுள்ள நிலையில், எதிரியின் கணவரை தான் பார்த்ததே இல்லை என புகார்தாரரின் மனைவி வசந்தி எ.சா.1 அவரது முதல் விசாரணையின் வாயிலாகவே குறிப்பிட்டுள்ளார் என்பதாலேயே, எதிரியின் கணவர் யார் என்ற விவரம் புகார்தாரருக்கும், அவரது மனைவிக்கும் தெரியாது எனக் குறிப்பிடும் விபரம் எதிரி தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், மேலும், புகார்தாரருக்கு, எதிரிக்கு கடன் கொடுக்கும் அளவிற்கு வசதி உள்ளது என்ற விபரத்தை புகார்தாரர் நிரூபிக்கவில்லை என்றும் இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9.22). எனவே, புகார்தாரர், எதிரிக்கு கொடுத்ததாகச் சொல்லும் கடன் புகார்தாரர் தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றும், புகார்தாரரின் வழக்கை எதிரி உரிய முறையில் மறுத்துரைத்துள்ளார் என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது. முடிவாக, மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 139-ன் கீழான சட்ட முறையான அனுமானம் எதிரி தரப்பில் மறுத்துரைக்கப்பட்டுள்ளது என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேலும், சட்ட முறையாக வலியுறுத்தி பெறக்கூடிய கடன் தொகை இல்லை என்பதை எதிரி தரப்பு

நிரூபித்துள்ளது என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9.23). புகார்தாரர் தரப்பில் முன்னிடப்பட்டுள்ள சாட்சிய, சான்றாவணங்களை பரிசீலித்த வகையில், எதிரி மீது சாட்டப்பட்டுள்ள மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழான குற்றச்சாட்டு புகார்தாரர் தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானிக்கப்படுகிறது. எனவே, எதிரியை இந்நீதிமன்றம் குற்றவாளி இல்லை எனத் தீர்மானிக்கிறது.

10).**<u>தீர்வு</u>**:

10.1). முடிவாக, எதிரியை மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானித்து, எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 255(1)-ன் கீழ் இந்நீதிமன்றம் விடுதலை செய்து தீர்ப்பளிக்கிறது. புகார்தாரருக்கு இழப்பீடு தொகை கிடைக்கத்தக்கதல்ல என்றும் இந்த நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

10.2). இவ்வழக்கில் தடயப் பொருள் தாக்கல் இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில் நீதிமன்ற இலட்சணையுடன் 2026 ஜூன் திங்கள் 19-ஆம் நாளாகிய இன்று அவையறியப் பகரப்பட்டது.

NALLA KANNAN M

Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.06.19 18:11:06 +0530

நீதித்துறை நடுவர்
போடிநாயக்கனூர்.

**<u>1). புகார்தாரர் தரப்பு சாட்சிகளின் பட்டியல்</u>**:

| | | | |
|---|---|---|---|
| 1. | ம.சா.1 | திரு.ராஜா | புகார்தாரர் |

**<u>2). புகார்தாரர் தரப்பு சான்றாவணங்களின் பட்டியல்</u>**:

| | | | |
|---|---|---|---|
| 1. | ம.சா.ஆ.1 | 17.08.2023 நாளிட்ட 033258 என்ற எண் கொண்ட சவுத் இந்தியன் வங்கி, போடிநாயக்கனூர் கிளைக்குரிய ரூ.12,00,000/-க்கான காசோலை அசல். | ம.சா.1 |
| 2. | ம.சா.ஆ.2 | 17.08.2023 நாளிட்ட வங்கி சலான் அசல். | ம.சா.1 |
| 3. | ம.சா.ஆ.3 | 18.08.2023 நாளிட்ட வங்கி ரிட்டன் மெமோ அசல். | ம.சா.1 |
| 4. | ம.சா.ஆ.4 | 21.08.2023 நாளிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல். | ம.சா.1 |
| 5. | ம.சா.ஆ.5 | 21.08.2023 நாளிட்ட அஞ்சலக ரசீது அசல். | ம.சா.1 |
| 6. | ம.சா.ஆ.6 | 22.08.2023 நாளிட்ட அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல். | ம.சா.1 |
| 7. | ம.சா.ஆ.7 | 05.09.2023 நாளிட்ட பதில் வழக்கறிஞர் அறிவிப்பு அசல். | ம.சா.1 |

**<u>3). புகார்தாரர் தரப்பு சான்றுப் பொருள்களின் பட்டியல்</u>**: தாக்கல் இல்லை.

**<u>4). எதிரி தரப்பு சாட்சிகளின் பட்டியல்</u>**:

| | | | |
|---|---|---|---|
| 1. | எ.சா.1 | திருமதி.வசந்தி | புகார்தாரரின் மனைவி |
| 2. | எ.சா.2 | திரு.ஸ்ரீவட்சவா | IDBI வங்கியின் துணை மேலாளர் |

**<u>5). எதிரி தரப்பு சான்றாவணங்கள் மற்றும் சான்றுப் பொருட்களின் பட்டியல்</u>**: தாக்கல் இல்லை.

NALLA KANNAN M

Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.06.19 18:11:11 +0530

நீதித்துறை நடுவர்

போடிநாயக்கனூர்.